# நமது தேவன் ஏவுதல் செய்கின்றவராய் இருக்கின்றார்

தேவன் தம்மை எவ்விதத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார் என்ற பாடத்திற்குப் பிறகு, தேவன் தமது செய்தியாளர்களை எவ்விதத்தில் ஏவியிருக்கின்றார் என்பதைக் கவனிக்க நாம் திரும்ப வேண்டியிருப்பதில் வியப்பெதுவும் இருக்கக் கூடாது. ஏவுதல் என்பது வெளிப்படுத்துதலுக்கான ஒரு விசேஷித்த வழி முறையாகும். இந்தப் பாடத்தில் நாம் தொடர்புடைய ஆனால் தனிச் சிறப்பானவைகளும், நம்முடனான அவரது உறவுக்கான வைகளுமான இரண்டு அம்சங்களில் நமது தேவன் "ஏவுதல் செய்கின்ற வராக" இருக்கின்றார் என்பது பற்றிப் பேசவிருக்கின்றோம்.

## நம்மீது அவரது செல்வாக்கு

முதலாவதாக, தேவன் ஏவுதல் செய்கின்றவராக இருக்கின்றார், ஏனென்றால் அவர் யாராய் இருக்கின்றார் என்பதும், அவர் என்ன செய்கின்றார் என்பதும் கொண்டுள்ள செல்வாக்கிற்கு இணங்குகின்றவர் கள்மேல் மனமகிழ்ச்சியூட்டும், உணர்வூட்டும் மற்றும் மேன்மைப் படுத்தும் வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவர் மாபெரும் பணியொன் றைச் செய்துள்ள மற்றும் தொடர்ந்து செய்து வருகின்ற மெய்யான மற்றும் ஜீவனுள்ள ஒரே தேவனாக இருக்கின்றார். அவருடைய மாபெரும் தன்மையும் வல்லமையும், அவரது சிருஷ்டிப்பிலும், நமக்கு உயிர்ப் பூட்டுகின்ற ஜீவனின் ஈவிலும் காணப்படுகின்றன. அவரே தோற்றுவித்தார் என்ற வகையில் நாம் அவரை அறிந்துள்ளோம். நாம் அவருக்குள் நம்முடைய தொடக்கத்தைக் காண்கின்றோம். நாம் அவரை நம்முடைய வழி நடத்துனர் என்ற வகையில் அறிந்துள்ளோம். அவர் வாழ்வுக்கு வழிகாட்டுதலைக் கொடுத்து, வரலாற்றை அர்த்தம் நிறைந்ததாக்குகின்றார். பாதுகாப்பவர் என்ற வகையில் அவரை நாம் அறிந்துள்ளோம். அவருடைய வல்லமையினால் நமது வாழ்வு நிலைநிறுத்தப்படுகின்றது. நாம் அவருக்காக வாழ்வதால் நிகழ்காலமானது தனிச் சிறப்புள்ளதாகின்றது. எதிர்காலமானது நமக்கான வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டுள்ளது என்று நாம் அவருக்குள் உறுதியாய் கருத்துக் கொண்டுள்ளோம்; இந்த முழு உலகத்தை யும் அவர் தமது கரங்களில் தாங்குகின்றார்.

*தேவனைப் பற்றிய நமது கருத்தானது, அவர் நம்மைப் படைத்தவர், வழிகாட்டி மற்றும் நமது உண்மைத் தன்மையின் பாகம் என்பதாக உள்ளது. இவைகள் நமது இருப்பிற்கான காரணத்தில் சூழ்ந்து கொள்ளப் பட்டுள்ளன. நாம் தேவனில் நம்பிக்கை வைக்கும் பொழுது, வாழ்வானது வெறும் இருப்பைக் காட்டிலும் அதிகமானதாகின்றது. ஒவ்வொரு நாளின் செயல்பாடு என்ற நடைமுறை ஒழுங்கானது வாழ்வின் இன்னும் பெரிதான நோக்கத்தில் அமிழ்த்தப்பட்டு விடுகின்றது. உலக வாழ்வு சார்ந்த பணிகளின் சலிப்பு, மேம்போக்கான மதிப்புகளும் தேவனுடைய உலகத்தின் அழகை மதித்துணருதல் மற்றும் தேவனுடைய மக்களுடன் கொண்டுள்ள ஐக்கியத்தினால் சந்தோஷம் ஆகியவற்றால் இடம் மாற்றப்படுகின்றன. வாழ்வானது ஒரு துணிவுமிக்க செயலாகின்றது. வாழ்வதற்குப் பேரார்வம் கொள்வது என்பது நடைமுறையாகின்றது.*

*இது ஒரு* Pollyanna *மேம்போக்கான சித்தரிப்பாகும் என்று நீங்கள் கூறுகின்றீர்களா? இல்லவே இல்லை. அவருக்கு ஒப்புக் கொடுக்கும் மக்கள்மேல் ஏவுதல் செய்கின்ற ஒரு தேவனுடைய செல்வாக்கைப் பற்றி நாம் விளக்கப்படுத்திக் கொண்டுள்ளோம். மேற்கண்ட ஆய்வானது விருப்பம் நிறைந்த எண்ணமல்ல என்று நாம் அறிய முடியும். அவரது மக்களின் வாழ்வில் அவரது செல்வாக்கானது எவ்வளவாய் ஏவுதல் செய்கின்றதாய் உள்ளது என்பதற்கான பதிவேடுகளுக்கு நாம் வழி பெற்றுள்ளோம்.*

*ஆபிராம், எதிர்காலம் பற்றியும் தேவனுடனான அவனுடைய உறவுமுறை பற்றியும் அக்கறையை விளக்கப்படுத்திய பொழுது அவனுக்கு மாபெரும் உறுதிப்பாடு தரப்பட்டது. "நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு ... உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்'' (ஆதி. 15:5, 6). வருங்கால சந்ததி பற்றிய வாக்குத்தத்தத்தாலும், தேவனுக்குள் அவருடைய விசுவாசம் தவறாததாயிருந்தது என்ற அறிவினாலும் ஆபிராம் உயர்த்தப்பட்டார்.*

*யோசுவாவின் நாட்களில் இஸ்ரவேலர்களின் வாழ்வானது சுலப மானதாய் இருந்ததில்லை. அவர்கள் தங்கள் மாபெரும் முன்னோடியான மோசேயை இழந்திருந்தார்கள். காலங்கள் நிச்சயமற்றவைகளாய் இருந்தன. கானானின் படையெடுத்தல் எவ்வேளையிலும் நடைபெறக் கூடியதாக இருந்தது. பலம் நிறைந்த, அகழிகளில் இருந்த மனிதர்களுக்கெதிரான இரத்தம் சிந்தும் யுத்தம் அவர்களை எதிர்நோக்கி இருந்தது. அப்படிப்பட்ட இறுக்கம் நிறைந்த வேளையில் யோசுவா மக்களை வழி நடத்தக் கூடியவராய் இருக்க முடிந்தது எப்படி? "கர்த்தர் யோசுவாவை நோக்கி, 'நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்' " (யோசு. 3:7) என்று கூறினார். யோசுவா தமது தேவனிடத்திலிருந்து பலத்த உற்சாக மூட்டுதலைப் பெற்றார். தேவன் வழியில் முன்சென்று நடத்துகின்றார்*

என்று நாம் நம்புகின்றபொழுது, கடினமான வேளைகளிலும் கூட தடைகளை வாய்ப்புக்களாக நோக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளது.

அன்னாள் என்பவள் எப்பிராயீம் மலை நாட்டைச் சேர்ந்த எல்க்கானா என்பவரின் மனைவியாய் இருந்தாள். அவர்கள் திருமணம் முடித்துப் பல ஆண்டுகள் ஆகியிருந்தது. அவளது கணவர் அவளை மிகவும் அன்பாக நேசித்தார். இருப்பினும் அவருக்கு அவள் ஒரு மகனைப் பெற்றுக் கொடுக்காததால் நிலை குலைந்து இருந்தாள். பழைய அருகாமை கிழக்கு நாடுகளில், கி.மு. இரண்டாவது ஆயிரமாண்டு காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கு பிள்ளையில்லாதிருத்தல் என்பது பேரழிவை உண்டு பண்ணும் அடியாக இருந்தது. திருமணமான, பிள்ளையில்லாத பெண்கள் ஒரு பெரிய பளுவை உணர்ந்தார்கள். அன்னாள் நிச்சயமாகவே அந்த அடியைப் பெற்றிருந்தாள். ஆகையால், தேவனுடைய கூடாரம் இருந்த சீலோவில் அவள் இருக்கையில் குழந்தை ஒன்று வேண்டும் என்று அவள் ஊக்கமாய் ஜெபித்தாள். அவளது ஜெபத்திற்குப் பதில் அளிக்கப்பட்டது. அவள் தனது மாபெரும் மகிழ்ச்சியில் தேவனுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் அந்தக் குழந்தைக்கு ஒரு பெயரிட்டாள்: அவள் அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள்.[1]

> அப்பொழுது அன்னாள் ஜெபம் பண்ணி, என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது; என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது; என் பகைஞரின்மேல் என் வாய் திறந்திருக்கிறது; உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன். கர்த்தரைப் போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை; எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை (1 சாமு. 2:1, 2).

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு, அவரிடத்திலிருந்து (தேவனிடத்திலிருந்து) தான் பெற்ற செய்தியினால் பரவசத்தில் தேவனை ஸ்தோத்தரித்த இன்னொரு பெண்ணைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். அவர் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து ஒரு குழந்தையை அவள் கர்ப்பம் தரிக்கச் செய்வதினால் அவளை ஆசீர்வதிக்கவிருந்தார். அவர் இயேசு என்று பெயரிடப்பட வேண்டியவராய் இருந்தார் (மத். 1:20, 21). அவளது வாழ்வில் ஏற்பட்ட ஒரு மாற்றம்தான் என்ன! மற்றும் நோக்கம், ஊழியம், சிலாக்கியம் ஆகியவற்றின் கருத்தறிவுதான் என்ன! அவளது நன்றியுணர்வும் மகிழ்ச்சியும் பாடலில் வெளிப்படுத்தப்பட்டன, “என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகின்றது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது ... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது” (லூக். 1:46-49).

தேவனுடைய செல்வாக்கின் கீழ் வாழ்கையில் ஒருவர், எவ்வளவு நம்பிக்கையும் நேர்மறை உணர்வும் கொண்டவராய் இருக்க முடியும் என்பதற்கு பவுல் மாபெரும் முன்மாதிரிகளில் ஒன்றாக இருக்கின்றார். அப்போஸ்தலர் என்ற வகையில் அவரது வாழ்வானது குழப்பமும் துன்பத்தின் அழுத்தமும் நிறைந்ததாக இருந்தது. பவுல் பல உபத்திர

*வங்களினால் பாடுபட்டார். ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்தார், மற்றும் தேவனுக்கு அவர் காண்பித்த ஆர்வப் பற்றினிமித்தமாக பல ஆண்டுகளைச் சிறையில் கழித்தார். அவர் நம்பிக்கையுள்ளவவராக இருந்தாரா? அவர், ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலி. 4:13) என்று கூறினார். அவர் நேர்மறையான எண்ணம் கொண்டிருந்தாரா? அவர், "மேலும் என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்" (பிலி. 3:1அ) என்று கூறினார். அவர் மனநிறைவுள்ளவராய் இருந்தாரா? அவர், "நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்" (பிலி. 4:11ஆ) என்று கூறினார். அவரது வாழ்வைப் பற்றிய அவரது மதிப்பீடு என்ன? அவர் பின்வருமாறு கூறினார்:*

> *நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோ. 4:7, 8).*

*வேதாகமத்திலிருந்து வருகின்ற இப்படிப்பட்ட முன் மாதிரிகள் ஏராளமாய்க் காணப்பட முடியும். விளக்கப்படும் சத்தியம் ஒரே மாதிரியானதாகவே இருக்கும். தொடக்கத்தில் தேவனைப் பின்பற்றிய இவர்கள் அனுபவித்ததை, காலங்களினூடே கணக்கற்ற இலட்சக்கணக்கானோர் கண்டறிந்துள்ளனர். தேவன் உண்மையாகவே மாபெரும் தைரிய மூட்டுபவராக இருக்கின்றார். அவர் நம்மை மேலே உயர்த்துகின்றார். அவர் நம்மை வழி நடத்துகின்றார். அவர் வாழ்க்கைக்கு அர்த்தத்தையும் தனிச் சிறப்பையும் கொடுக்கின்றார். அவர் நம்மை நித்திய ஜீவனுக்குக் கூட அழைக்கின்றார். தேவன் ஏவுதல் செய்கின்றவராய் இருக்கின்றார் என்பதற்கு எந்த விதமான கேள்வியும் இல்லை.*

## வேதாகமத்தில் அவரது ஏவுதல்

*தேவன் தம்முடைய ஏவுதலின் இயல்பை இரண்டாவது வழிமுறையொன்றில் - நம்பகத் தன்மையில் அடிப்படையான அஸ்திபாரமாய் இருக்கின்ற வேத வசனங்களில் அவரது ஏவுதலில் - விளக்கப்படுத்துகின்றார். ஆபிரகாம், யோசுவா, எலியா, மரியாள், ஸ்தேவான் மற்றும் பலர் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்ததாலும், அவரது ஆணைப்படி செய்த தாலும் வெற்றிகரமான வாழ்வை வாழ முடிந்தது எப்படி என்பதை வேதாகமம் நமக்கு கூறுகின்றது. வேத வசனங்கள் உண்மையானவைகளாய் இருக்கின்றன என்ற உறுதிப்பாட்டை நாம் பெற்றிராதிருந்தால், இவை யாவும் "உண்மையான வரலாறுகள்" தான் என்பதை நாம் அறிந்திருக்க முடியாது. இருப்பினும், அந்த உறுதிப்பாட்டை நாம் பெற்றுள்ளோம்.*

*வேதாகமம் புதை பொருள் ஆராய்ச்சி மற்றும் வேதாகமம்*

எழுதப்பட்ட காலத்திற்குச் சம காலத்தில் இருந்த பழங்கால எழுத்துக்கள் ஆகியவை வேதாகம வரலாற்றின் முறையான முடிவுகளை நிலை நாட்டுவதில் நீண்ட அளவு உள்ளது போன்ற கிறிஸ்தவத்தின் ஆதாரங்களின் களமானது மிகப் பரந்ததாக உள்ளது.[2] இந்த ஆதார மூலங்களைப் படிப்பது என்பது வேதாகமத்தைப் பற்றிய உயர்தரக் கண்ணோட்டத்தை அளிப்பதில் பயனுள்ளதாக இருக்க முடியும். ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றத்திற்காக நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்கின்றோம். இந்த ஆதாரங்கள் வேதாமத்தின் மீது நமக்குள்ள நம்பிக்கையை உயர்த்தியிருக்கையில், அவைகளின் வரலாற்று ரீதியான மிகச் சரியான தன்மை பற்றிய நமது அறிவை அவை தாங்கி நிற்பதால் அப்படிச் செய்கின்றன (நம்பிக்கையை உயர்த்துகின்றன). வேதாகமம் தேவனால் ஏவப்பட்ட வசனம் என்ற அதன் உரிமைகோருதலின்படியானதாக உள்ளதென்றால், அது (வேதாகமம்) மிகச் சரியானதாகவே இருக்க வேண்டும். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; ... அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர் திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16, 17) என்று நாம் வாசிக்கின்றோம்.

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்ற சொற்றொடரை நாம் கிரேக்க மொழியில் நோக்குகையில் (*pase graphe theopneustos*) பல்வகை மொழிபெயர்ப்புக்களினால் பொருள் தெளிவின்மை ஏற்படுகின்றது.[3] இது, தேவனால் சுவாசிக்கப்பட்டது என்ற அர்த்தம் கொண்ட *theopneustos* என்ற கிரேக்க வார்த்தையானது *ivinitus inspirata* என்ற இலத்தீன் வார்த்தையின் வழியாக மொழிபெயர்க்கப் பட்டதால், "தேவனால் ஏவப்பட்டது" (God-inspired) என்று ஆகின்றது. இந்த செயல்முறையில், "தேவன் வெளியிட்ட சுவாசம்" என்பது அதன் தலை திருப்பப்பட்டு "தேவன் உள்ளிழுத்த சுவாசம்" என்று அர்த்தப்படுத்த மாற்றப்பட்டது. 2 தீமோ. 3:16ல் பவுல், வேத வாக்கியங்கள் யாவும் தேவனுடைய தெய்வீக வல்லமையின் விளைவாக உள்ளன மற்றும் அவை எடுத்துரைக்கும் வழிமுறைகள் நமக்குப் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கின்றன என்று வலியுறுத்தினார். உண்மையில் அவருடைய (தேவனுடைய) "வெளியிட்ட சுவாசம்" என்ற வழிமுறையின் மூலம் தேவனுடைய சிருஷ்டிப்பு வல்லமை என்ற மிகப் பெரும் ஆய்வுப் பொருளானது வேதாகமத்தில் மற்ற இடத்தில் காணப்படுகின்றது. தேவனுடைய மனிதப் படைப்புச் செயலை நாம் படிக்கையில் இது செயல் விளக்கப்படுத்தப் படுவதை நாம் கண்டோம். நாம் அவரது படைப்புச் செயலின் மகிழ்வூட்டும் சித்தரிப்பானது சங். 33:6ல் விவரிக்கப்பட்டதைக் காண்கின்றோம்: "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது." இவ்விதமாக, "தேவன் வெளியிட்ட சுவாசம்" என்பது அவருடைய நோக்கம் நிறைவேறுவதற்காக அவர் ஊற்றிய அவரது வல்லமை என்பதை விவரிக்கும் ஒரு வழி முறையாக இருப்பதை நாம் காண்கின்றோம். ஜீவனைக் கொடுப்பதோ, அண்டத்தைப் படைப்பதோ, அல்லது அவருடைய வார்த்தையை/வசனத்தை எழுதுவதோ

*எது அவருடைய நோக்கமாயிருந்தாலும் இதுவே விஷயமாயுள்ளது. "தேவனுடைய சுவாசத்தினால்" சிருஷ்டிப்பு வந்தது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாகவே அவரது "சுவாசத்தினாலேயே" வேதாகமமும் வந்தது. இவ்விரண்டுமே அவரது வல்லமை மற்றும் கிரியை ஆகியவற்றினால் உண்டானவையாகும்.*

*வேதாகமத்தின் வரலாற்றுப் பூர்வமான மிகச் சரியான தன்மையைச் சுட்டிக்காட்டுகின்ற கிறிஸ்தவத்தின் ஆதாரங்களுக்கு நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்கையில், தேவனுடைய வசனத்தின்மீது நாம் கொள்கின்ற மதிப்பு மற்றும் அன்பு ஆகியவை பெருமளவும் விசுவாசத்தைச் சார்ந்த விஷயமாய் உள்ளது. எழுதப்பட்டுள்ள தேவ வசனத்திற்கு நாம் திரும்பும் பொழுது, நமது விசுவாசம் அங்கிருந்தே உண்டாக்கப்படுவதைக் காண்கின்றோம். புதை பொருள் ஆராய்ச்சியிலிருந்தோ அல்லது வேறு எந்த அறிவியலில் இருந்தோ இது உண்டாக்கப்படுவதில்லை (ரோமர் 10:15-17). எழுதப்பட்டுள்ள தேவ வார்த்தையின் வல்லமையானது விசுவாசத்தை உண்டாக்கும், விசுவாசத்தைக் காக்கும் வல்லமையுடையதாக இருக்கின்றது. நாம் வேறெங்கும் அனுபவித்திருக்கக் கூடியதைக் காட்டிலும் மிகப் பெரிய உள்ளான வல்லமை வேதாகமத்தில் இருப்பதை நாம் காண்கின்றோம்! கொந்தளிக்கும் புயல், பூமியதிர்ச்சிகள், உயர்ந்த அலைகள், காட்டுத் தீ முதலியவற்றைப் பற்றி நாம் அறிகின்றோம். வேத வசனங்களில் நாம், மனிதருடைய வாழ்வை மாற்றி, இரட்சிக்கக் கூடிய அளவு பெலமுடைய ஒரு வல்லமையை காண்கின்றோம்! இங்கு குறிப்பிடப்பட்ட அழிக்கும் சக்திகளைக் காட்டிலும், பாவத்தின் பேரழிவு வல்லமையைக் காட்டிலும், பிறப்பிலிருந்தே நாம் யாவரும் எதிர்கொள்ளுகின்ற மரணத்தைக் காட்டிலும் இந்த ஆதார மூலமானது அதிகம் வல்லமை யுள்ளதாக இருக்கின்றது.*

*இந்த வல்லமையானது நம்மை விடுதலையாக்க முடியும் (யோவா. 8:32). சங்கீதக்காரர், "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங். 119:105) என்று கூறினார். அப்போஸ்தலரான யோவான் இயேசுவைப் பற்றி, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. 1:14) என்று கூறினார். வேதாகமத்தில் அவரது வார்த்தை பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது. அவர் ஒருவர் மூலமாகவே நாம் இல்லத்திற்குத் திரும்பவும் வழி நடத்தப்படுகின்றோம் என்று நாம் அவரைக் காண்கின்றோம் (யோவா. 14:1-6). ஏவுதல் பெற்ற மனிதர்களால் எழுதப்பட்ட வேதாகமத்தில், நாம் எப்பொழுதும் அறியக் கூடியவர் களிலேயே மிகவும் அதிகமாக ஏவுதல் பெற்ற நபரை நாம் சந்திக்கின்றோம். அவர், "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன்" (யோவா. 10:10ஆ) என்று கூறினார். ஒன்றைக் காட்டிலும் அதிகமான வழிமுறைகளில் நமது தேவன் உண்மையாகவே ஏவுதல் செய்கின்றவராக இருக்கின்றார்.*

குறிப்புகள்

[1]*Shmu'el* *என்பது "ஏல்(தேவன்)உடைய பெயர்" என்று அர்த்தப்படுகின்றது* (Francis Brown, S. R. Driver and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* [Oxford: Clarendon, 1958], 1028). [2]*"... கடந்த காலத்திற்கும் சுற்றிலுமுள்ள கலாச்சாரத்திற்கும் தொடர்பற்ற வகையில் வேதாகமமும் அதன் செய்தியும் உடனடியாக வெற்றிடத்தில் எழுந்தது என்று கூறுவதானது வேதாகமச் சிந்தனையின் ஏராளமான வளமைகளையும் வேதாகம கால உலகத்தையும் காணத் தவறும் செயலாகும். மற்றும், இது வேதாகமம் என்ன கூற வந்துள்ளது என்பதைத் தவறாகப் புரிந்து கொள்ளும் தீவிரமான இடர்ப்பாட்டிலும் இட்டுச் செல்லக் கூடியதாக உள்ளது. நித்திய தேவனின் காலமற்ற செய்தியானது சரியான காலத்தில் மனிதனுக்கு உரைக்கப்பட்டது ..."* (Harry Thomas Frank, *Bible Archaeology and Faith* [Nashville: Abingdon, 1976], 12). [3]The KJV, RSV, NAB, NEB, NIV can be consulted for comparison.